(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 390.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 செத்தெம்பர் 10, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3244/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களைக் கொண்டுள்ளதா அல்லது குறை ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3710/ '13

2.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் சனாதிபதியவர்களின் உத்தியோகபூர்வ பணியாட்டொகுதிக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றைய சனாதிபதியவர்களின் உத்தியோகபூர்வ பணியாட்டொகுதியில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணியாட்டொகுதிக்குரிய ஒவ்வொரு பதவி மற்றும் அதற்குரிய பொறுப்புகள் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவிகளை வகிக்கும் ஒவ்வொருவரினதும் பெயர், கல்வித் தகைமைகள், வேறு தகைமைள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி பணியாட்டொகுதியினருக்காக செலுத்தப்படும் சம்பளம், ஏனைய அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(vi) இதற்கமைய சனாதிபதியவர்களின் பணியாட்டொகுதியினருக்காக கடந்த 3 வருடங்களினுள் ஏற்கப்பட்ட செலவினங்கள் எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி செலவினங்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி பணியாட்தொகுதியினர் திருப்தியடைக்கூடிய விதத்தில் போதியளவு கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்றார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3829/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் வன ஒதுக்கம் மற்றும் கடற்படை வேலைத்தளம் அமைந்துள்ள சரணாலயத்தினுள் அனுமதியற்ற மற்றும் சட்ட விரோத 30 கல் உடைக்கும் தலங்கள் நடாத்தப்படுகின்றனவென்பதையும்;

(ii) தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கல்மெட்டியாவ கிராம அலுவலர் பிரிவில் கந்தளாய் வன ஒதுக்கத்தினுள் அமைந்துள்ள பாரிய அளவிலான கல் உடைக்கும் தலத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இதற்கு அனுமதி வழங்குமாறு பிரதேசத்திலுள்ள பலம்பொருந்திய பெண் அரசியல்வாதியொருவர் அரச அலுவலர்களுக்கு பெரும் அழுத்தம் கொடுக்கின்றாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தாவர, விலங்கின பாதுகாப்புச் சட்டத்தை மீறி, காடுகளை வெட்டித் துப்புரவு செய்து கல் உடைக்கும் தலங்களை நடாத்துவது சட்ட விரோதச் செயலாகவும் சுற்றாடலைப் பாதிக்கும் செயலாகவும் இருக்கின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இச்சட்ட விரோதச் செயல்களை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4104/ '13

4.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர்ந்தளவு உயிரியல் பல்வகைத்தன்மையைக் கொண்ட வன ஒதுக்கமான "பிதுருதலாகல" மலைத் தொடரின் மேற்குச் சரிவில் உருளைக்கிழங்குச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கைக்காக பெருமளவு நிலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இவ்வாறு துப்பரவு செய்த தரப்பினர் யாவர் என்பதையும்;

(iii) இவர்களுக்கு இதற்காக அனுமதி வழங்கியவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4443/ '13

5.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக குருநாகல் மாவட்டத்தினுள் இனங்காணப்பட்ட வீடுகளற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்க உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4558/ '13

6\.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வீடொன்று இல்லாத, குறைந்த வருமானம் பெறும், வெளிநாட்டில் தொழில்புரிகின்ற ஊழியர்களுக்காக "ரட்டவிருவோ கடன் திட்டம்" என்ற பெயரில் வீடமைப்புக் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கடனை வழங்குகின்ற வங்கி யாது;

(iii) நாட்டினுள் இயங்கி வருகின்ற அந்த ஒவ்வொரு வங்கிக் கிளைகளினதும் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி கடன் திட்டம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் தொகையொன்றை பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் தகைமைகள் யாவை;

(ii) ஒருவருக்கு வழங்கப்படும் கூடியபட்ச கடன் தொகை எவ்வளவு;

(iii) மேற்படி கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு;

(iv) இதுவரை மேற்படி கடன் தொகைக்கு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4569/ '13

7\.

கௌரவ துனேஷ் கன்கந்த,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் என அழைக்கப்படுகின்ற பாடசாலைகளை அவ்வாறு வகைப்படுத்துவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது காணப்படுகின்ற தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையும் மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளில் உள்ளடங்கியிருந்த மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஆண்டின் நடுப்பகுதியில் மேலதிக பாடசாலை சீருடைத் துணி, இலவசமாக ஒரு சோடி பாதணிகள் அத்துடன் தானியங்கள், முட்டை மற்றும் பாலுடன் கூடிய ஒரு வேளை உணவு வழங்கப்படுமென்ற முன்மொழிவுகளுக்கமைய மேற்படி ஒவ்வொரு வசதியையும் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக அரசாங்கம் வருடாந்தம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4712/ '14

8.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (I) முருங்கன் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மலுவராயர், கட்டை அடம்பன், மடு வீதி, முருங்கன் முகவரியில் வசித்த திருமதி. மாரிமுத்து சண்முகம் மற்றும் இவரது குடும்ப அங்கத்தவர்கள் எல்.ரி.ரி.ஈ அச்சுறுத்தலினால் அவ்வீட்டை கைவிட்டுச்சென்று அகதிகளாக பிறிதொரு பிரதேசத்தில் வசித்த காலப்பகுதியில் இவர்களின் வீடு அமைந்திருந்த இடத்தில் அதிவலுவுள்ள மின்சாரக் கம்பிகளை இடுவதற்கான பாரிய மின்சாரக் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இவர்களின் வீட்டை அகற்றி அந்த இடத்தில் மின்சாரக் கோபுரமொன்று நிர்மாணிக்கப்பட்டமைக்காக திருமதி. மாரிமுத்து சண்முகத்திற்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுவதை விதந்துரைத்து இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் DGM (P&HM-R1) GEN இலக்கமும் 2011.07.07 ஆம் திகதியும் கொண்ட கடிதம் மூலம் வவுனியாவில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான பொறியியலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடியமர்ந்திருந்த வீட்டினை இழந்து நிர்க்கதிநிலைக்கு உள்ளாகியுள்ள திருமதி. சண்முகத்திற்கு வழங்கவேண்டிய நட்டஈட்டுத் தொகை இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி நட்டஈட்டுத் தொகையினை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4744/ '14

9.

கௌரவ அசோக் அபேசிங்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் உள்ள மின்சார வசதி இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மின்சார நீடிப்பு மூலம் மின்சார வழங்கலைப் பெற்றுக்கொடுப்பதற்குள்ள இடங்களுக்கு மின்சார நீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) குறைந்த மின்சார கொள்ளளவை கொண்டுள்ள நகரங்களின் மின்சார கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4815/ '14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காணாமல் போயுள்ள வாகன வருமான உரிமப்பத்திரத்திற்குப் பதிலாக ஒரு பிரதியை பெற்றுக் கொள்ளும் போது மேற்படி உரிமப்பத்திரம் காணாமல் போன திகதி முதல் முன்னோக்கியுள்ள காலத்திற்காக முழு உரிமப்பத்திரக் கட்டணமும் உரிமப்பத்திர உரிமையாளரிடமிருந்து மீண்டும் அறவிடப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) குறித்த ஆண்டுக்கான வருமான உரிமப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டு அரச வருமானத்தில் வரவுவைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த உரிமப் பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் முழு உரிமப் பத்திரக் கட்டணத்தையும் அறவிடுவதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சாதாரண கடுதாசியில் அச்சிடப்பட்டுள்ள வாகன வருமான உரிமப்பத்திரம் அழிவடைவதற்கு அல்லது காணாமல் போவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) எனவே, மேற்படி உரிமப்பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்குச் செலவாகும் செலவினத்தை மாத்திரம் அறவிட்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4847/ '14

11.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் சூதாட்ட வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இது வரைக்கும் விநியோகிக்கப்பட்டள்ள உரிமங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் மற்றும், அல்லது கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட திகதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4920/ '14

12.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006.02.28 ஆந் திகதி ரங்கிரி தம்புல்லை சர்வதேச கிரிக்கெற் விளையாட்டரங்கின் நிரந்தர சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்ட தொழிலாளர்கள் சிலர் 2011.12.31 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டனரென்பதையும்;

(ii) இவர்களுக்கு ரூபா 250,000.00 இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டரங்கின் வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற போது அவ்வூழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென இலங்கை கிரிக்கெற் நிறுவனத்தினால் நீதிமன்றத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) ஆயினும் அவர்களைக் கவனத்திற் கொள்ளாமல் சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த 24 பேர் அவ்விளையாட்டரங்கில் சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்களின் பெயர்களை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டரங்கில் சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்தச் சம்பளம் எவ்வளவு;

(iii) இவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை;

(iv) மேலே (அ) (iv) இல் குறிப்பிடப்பட்டவர்களை ஆட்சேர்ப்பதற்காக விசேட நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட திகதி யாது;

(v) மீண்டும் ஆட்சேர்க்கப்படுகையில் நீக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாமையால் இவர்கள் தீவிர அநீதிக்கு இலக்காகி உள்ளனரென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(vi) ஆமெனில் அதுசம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4948/ '14

13.
கௌரவ சுஜீவ சேனசிங்க,—பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமானது தற்போது ரூபா 95 பில்லியனை விஞ்சியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் வங்கி மேலதிக பற்றுகளுக்காக மட்டும் ரூபா 43 கோடிக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டியுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது அரச வங்கிகள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்குவதை நிராகரித்துள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், மேற்படி நிலைமையின் கீழ் உயர் கடன் வட்டி நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு பெற்றோலியக் கம்பனிகளிலிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5192/ '14

14.
கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி மீனவர் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத் தரப்பினரின் தலையீடு யாது;

(iii) தற்போது இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களை விடுவிப்பதில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தலையீடு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பின், இதற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத் தீர்விப்பொதியொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அது யாது;

(iii) மேற்படி நிவாரணப் பொதிக்கும் எரிபொருள் மானியத்துக்கும் இடையிலான வேறுபாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சர்,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு,— குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறுவதற்கும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளயும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புத் தொடர்பாகத் தோதான சர்வதேச மரபுகளுக்கும், நியமங்களுக்கும், மிகச் சிறந்த செயல்முறைகளுக்கும் பயன்கொடுப்பதற்கும்; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையைத் தாபிப்பதற்கும்; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளனதும் முகாமைச் சபையொன்றையும் இலங்கைப் பொலிசுத் திணைக்களத்தின் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளிற்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவையும் அமைப்பதற்கும்; குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கும்; குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளைினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014 செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 09, 2014) ,— “1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 யூலை 21 ஆம் திகதிய 1872/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஆக்கப்பட்டு, 2014 யூன் 16 ஆம் திகதிய 1867/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிர்மாணத் தொழில் அபிவிருத்தி — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 5.

மாநகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2014 மே 19 ஆம் திகதிய 1863/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 26.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 27.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 28.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 29.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 30.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 31.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 32.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

33.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

ஜம்மிய்யத்துல் ஸஹ்வா அல் - கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42\.

எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43\.

அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44\.

அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

4559/ '13

1\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி, தண்டனை விதிக்கப்பட்ட நீதி மன்றம், தண்டனை விதிக்கப்பட்ட திகதி மற்றும் வழக்கு இலக்கம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மரண தண்டனை பெற்றுள்ள மேற்கூறிய நபர்களில் அரசியலமைப்பினால் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், அத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அதற்குரிய திகதிகள் யாவை என்பதையும்;

(ii) 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை மற்றும் 2012.06.01 ஆம் திகதி தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியில் சனாதிபதியவர்களின் மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் விடுதலை செய்யப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---